**ரணவிரு சேவா அதிகாரசபை – 2017**

---

ரணவிரு சேவா அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 54 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 9(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடக்கப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான சுயவிருப்புரிமையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன். என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ரணவிரு சேவா அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் இயந்திர உபகரண சொத்து மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்து உள்ளடங்கும் முழுமையான இயந்திர உபகரணங்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இருந்தபோதிலும், அதிகாரியின் காணி கட்டிட பெறுமதிக்கு உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான காரியாலயத்தின் காணி கட்டிடமானது நடைமுறையாண்டின் போது மீள் மதிப்பீடு செய்து கணக்குகளில் பதியப்பட்ட போதிலும், அதிகாரியினால் 2013 ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட மயிலபிடிய பிரதேசத்தின் ரணவிரு பூங்கா அதன் கிரய பெறுமதியான ரூபா 2,872,387 மட்டுமே கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நியமத்தின் 90 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து மீள்மதிப்பீடு செய்யப்படும் திகதி, மீள் மதிப்பீட்டாளர் தொடர்பான விபரங்கள், சொத்தின் சாதாரண பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட நடைமுறை மற்றும் விசேட அனுமானம் போன்றன வெளிக்கொணரப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு கொள்கை 1 இல் பந்தி இலக்கம் 48 இன் படி, தேவையான போது அல்லது அனுமதி வழங்கப்பட்ட போது தவிர வருமானம் மற்றும் செலவு ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாத போதும், நடப்பாண்டில் மேலதிக ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 862,760 அதிகாரியின் வருமானத்திற்கு எதிராக செலவு வைப்பதற்குப் பதிலாக அறவிடமுடியாக் கடன் செலவிலிருந்து கழித்துக் காட்டப்பட்டுள்ளது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த ஆண்டுகளின் நன்கொடையாக கிடைக்கப் பெற்ற காணி 24.90 பார்சஸ் இரண்டு துண்டுகள் நடைமுறை ஆண்டிலும் அதன் உரிமையை அதிகாரிக்கு மாற்றிக் கொண்டுள்ள போதிலும், அதன் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளில் காட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரிக்கு சொந்தமான 3 காணித்துண்டுகளின் பெறுமதி ரூபா 60,590,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் இதனை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிரயம் ரூபா 11,239,262 பெறுமதியான மின்உயர்த்தி (Lift) ஆனது அதன் பாவனைக்குரிய ஆயுள் காலத்தை கவனத்தில் கொள்ளாது காரியாலய கட்டிடச் சொத்தின் கீழ் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கட்டிட பெறுமானத்தேய்வான 5 சதவீதத்தில் பெறுமானத்தேய்வு ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடப்பாண்டின் நிதிக்கூற்றுக்களுக்கு அமைவாக பயனாளிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் மீதி ரூபா 100,053,628 ஆக உள்ள போதிலும் கணக்காய்விற்காக வழங்கப்பட்ட தனிநபர் கடன் கூற்று மீதி ரூபா 99,963,300 ஆக இருந்தது. இதற்கமைய ரூபா 90,328 வேறுபாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 டிசெம்பர் 31 திகதியில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கடன் மீதிக்கான சேவைக் கட்டண வருமானம் ரூபா 11,558,510 ஆக இருப்பினும் தனிப்பட்ட கடன் மீதி தொகுப்பின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 12,016,481 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 457,971 வித்தியாசப்படுகின்றது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2009 ஆம் ஆண்டு முதல் 2016 டிசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் மூன்றாம் நபர்களினால் அதிகாரிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நன்கொடை ரூபா 2,310,336 ஆகும். பல்வேறுபட்ட சொத்து தொடர்பான நன்கொடைக்கான பதிவேடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

நடப்பாண்டின் இறுதியில் வீட்டுக் கடன் பயனாளிகள் 10 பேரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 595,709 ஆன கடன் மீதி வருடம் 2 தொடக்கம் 8 வருட காலத்திற்குரிய தவணைப்பணம் முழுமையாக அறவிடப்படாதிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 110 | அதிகாரியினால் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்படாமை. |
| (ஆ) | 2016 டிசம்பர் 29 ஆந் திகதி இலக்கம் 30/2016 ஆம் அரச நிர்வாக சுற்றறிக்கை | ஒவ்வொரு எரிபொருள் பரிசீலனையின் பின் 12 மாதங்களுக்குள் அல்லது 25,000 கிலோமீட்டர் தூரம் ஓடியபின் எரிபொருள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். இருப்பினும் அதிகாரியினால் நடைமுறை ஆண்டில் வாகன எரிபொருள் பாவனை தொடர்பான பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) | 2015 யூலை 14 ஆம் திகதி இலக்கம் 03/2015 ஆம் அரச நிதிச் சுற்றறிக்கை | குறிப்பிடப்பட்ட வேலை முடிவடைந்தவுடன் முற்பண முதல் தீர்க்கப்பட வேண்டுமெனினும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகாரியின் ஊழியர்கள் இருவருக்கு 5 சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்ட ரூபா 1,830,450 பெறுமதியான முற்பணம் 2017 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்த்து வைக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிகிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ரணவிரு சேவா அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 61,412,678 பற்றாக்குறையை காட்டுவதுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 32,013,286 ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பீட்டளவில் பார்க்கும் போது மேலும் ரூபா 29,399,392 இனால் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. மேலும் நடப்பாண்டின் அதிகாரியின் முழுமையான வருமானம் ரூபா 27,317,324 ஆல் அதிகரித்திருந்தது. வழங்கல் செலவு ரூபா 4,342,661 ஆலும், ஒப்பந்த சேவைகள் ரூபா 9,231,860 ஆலும் மற்றும் திட்டச் செலவு ரூபா 23,523,574 ஆலும் அதிகரித்தமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதானமான காரணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளினை பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 12,301,556 ஆகக் காணப்பட்டதுடன் பிந்திய வருடங்களில் மேலும் குறைவை காட்டிய போதும் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியின் போது ரூபா 61,412,678 தொகை பற்றாக்குறையாக காணப்பட்டது. எப்படி இருப்பினும் நடைமுறை ஆண்டின் நிதி விளைவுகளுக்கு ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களின் மீதான பெறுமானத்தேய்வினை மீள ஒழுங்குபடுத்திய பின் அதிகாரசபையின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டிறுதியில் ரூபா 14,882,175 ஆக இருந்த அதிகாரியின் பங்களிப்பானது நடப்பாண்டில் ரூபா 1,159,434 வரை குறைவைக் காட்டியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்திறன்

#### 4.1.1 செயற்திறன் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்க ரணவிரு சேவை அதிகாரச்சட்டத்தின் 6 ஆவது பிரிவின் படி யுத்தத்தில் அங்கவீனர்களாகிய இராணுவ வீரர்கள் மற்றும் இறந்த வீரர்களும் காணாமல் போன இராணுவ படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்போர் தொடர்பான பெயர் விபரக் கோவை அதிகாரி ஆரம்பமாகி 60 நாட்களுக்குள் தயாரித்து அதனை தொடர்ந்து மேம்படுத்த வேண்டி இருப்பினும் அதிகாரி ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகியும் முழுமையான பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்கும் தேவைக்கு ஏற்ற வகையில் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக 269 ரணவிரு மன்றம் ஆரம்பிக்கப்பட்டு 11 வருடங்கள் காலங்கடந்த போதிலும் தரவு அமைப்புக்கு தேவையான தகவல்கள் சேகரித்தல் தொடர்பாக 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் வருடம் வரையான காலப்பகுதியில் ரூபா 12,958,801 தொகையானது செலவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், இது தொடர்பாக செய்யப்பட்ட ஆழமான பரிசீலனையால் மன்ற அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் சார்ந்திருப்போர் தொடர்பான முழுமையான விபரம் அதிகாரியிடம் இருக்கவில்லை.

(ஆ) படைவீரர்களின் பொதுநல நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிக்கு 2009 ஆம் வருடம் நன்கொடையாக பெறப்பட்ட அகுரஸ்ச யாகபெத்த பிரதேசத்தில் அமைந்துள்ள 302 பர்சஸ்அளவிலான வீட்டுடனான காணியை சீர்திருத்துவதற்காக ரூபா 9,366,285 தொகை செலவு செய்த போதிலும், மீளாய்வாண்டின் முடிவின் போதும் கூட பொதுநல நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் விருசுமிதுரு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் அரைவீடுகள் 450 உம் புதிய வீடுகள் 300 உம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 192 புதிய வீடுகள் கட்டுவதற்காக தவணைப்பணம் மாத்திரமே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இத்திகதியில் அரைவீடுகள் தொடர்பான பயனாளிகள் ஒருவருக்கும் வீட்டுக் கடன்கள் பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் புதிய வீடுகள் நிர்மாணித்தல் தொடர்பாக 15 பேர் பொய்யான கதவல்கள் வழங்கி ரூபா 130,000 படி ரூபா 1,950,000 பெறுமதியான தொகையை பெற்றுக்கொண்டமை வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பின் பரிசீலனை செய்யும் வேலையானது பலவீனமாக காணப்பட்டது.

(ஈ) அதிகாரியினால் படை வீரர்களுக்கு தற்காலிகமாக அனுமதிப்பத்திரம் மூலமாக பெற்றுக் கொடுக்கப்பட்ட பலாங்கொட, கேகாலை, மீரிகம மற்றும் மாலபேயில் உள்ள 15 காணித் துண்டுகளுக்கு உரிய பத்திரம் தயாரிப்பதற்கான நடவடிக்கையானது 2018 சனவரி 22 ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்படவில்லை.

## 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2004 செப்தெம்பர் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும் வகையில் அதிகாரியின் கம்பியூட்டர் ஒபரேட்டராக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் 2009 ஆம் ஆண்டில் 02 வருடகால வேதனமற்ற லீவில் வெளிநாடு செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்ட போதும், பிணை ஒப்பந்த விதி மீறலின் பின்னர் சேவையிலிருந்து விலகியிருந்தார். இந்த உத்தியோகத்தரால் அதிகாரிக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 530,380 தொகையை பெற்றுக்கொள்வதற்கு அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் அவரது தனிப்பட்ட கோவையும் காணாமல் போயிருந்தது.

## 4.3 காட்சி முறைகேடுகள்

ரணவிரு மாபிய ரெகவரன கொடுப்பனவு முறையின் கீழ் ஒரு படைவீரரின் தாய்க்கு அல்லது தந்தைக்கு வருடத்திற்கு ரூபா 9,000 படி கொடுப்பனவு தொகை வழங்கப்பட முடியும். எனினும், 2016 யூன் மாதம் தொடக்கம் 2017 நவம்பர் வரையிலான 18 மாதகாலத்தில் படைவீரரின் தந்தையென அடையாளம் காணப்பட்ட நபரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு ரூபா 819,750 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், படைவீரரின் தாய் அல்லது தந்தை அல்லாத வெளிநபர் ஒருவருக்கு மேல் குறிப்பிடப்பட்ட காலத்தில் ரூபா 5,120,250 தொகை செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உள்ளக பரிசீலனையின் போது மேற்படி கொடுப்பனவுகள் முறைகேடாக நடைபெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதுடன் இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக குற்ற பரிசீலனை திணைக்களத்தினால் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) படைவீரர் முன்னுரிமை அடையாள அட்டை அச்சிடுதல் சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டு ரூபா 651,739 க்கு கொள்வனவு செய்யப்பட்ட அச்சிடல் இயந்திரம் உட்பட கொள்விலை ரூபா 229,500 பெறுமதியான 02 விரல் அச்சு இயந்திரம் மற்றும் கொள்விலை ரூபா 42,158 பெறுமதியான 06 கணனி மேசை என்பன அதிகாரியின் சூழலில் 2 வருட காலத்திற்கு மேலாக பாவனையின்றி இருந்தன. மேலும், 2015 செப்டெம்பர் மாதம் நன்கொடையாக பெறப்பட்ட ரூபா 152,000 பெறுமதியான 04 மடிக் கணனியும் (லெப்டொப்) பாவிக்கப்படாமல் இருந்தன.

(ஆ) 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் மறுமதிப்பீட்டு பெறுமதி ரூபா 62,625,000 மற்றும் சதுர அடி 11548 அளவான பிரதான காரியாலய கட்டிடத்தில்சதுர அடி 2887 அளவான மாடிப் பகுதியானது 2001 ஆம் ஆண்டு தொடக்கம் பாவிக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பில் மீளாய்வாண்டில் பழுதுபார்த்தல் தொடர்பில் ரூபா 203,598 ஐ செலவு செய்த போதும் கிலோமீட்டர் 300 வரையான தூரத்தையே ஓடியிருந்தது. மேலும் அதிகாரிக்கு சொந்தமான ரூபா 1,975,000 பெறுமதியான மோட்டார் வாகனம் மற்றும் ரூபா 900,000 பெறுமதியான கெப் வாகனம் என்பன 2 வருட காலமாக அதிகாரியினால் பாவிக்கப்படாமல் இருந்தது.

## 4.5 அடையாளம் காணப்பட்ட இழப்புக்கள்

அதிகாரியினால் 2016 ஆம் ஆண்டுக்கான பௌதீக பொருள் ஆய்வு செய்யப்படாதிருந்த போதும் 2017 ஆம் ஆண்டுக்கான பௌதீக பொருள் ஆய்வு கூற்றானது 2018 மே 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. அந்த கூற்றுக்கு அமைய தலைப்பு 31 க்கு உரிய 170 பொருட்கள் குறைபாடாக காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. இவ் காணாமல் போன பொருட்களுக்குள் 11 டிஜிட்டல் கெமராக்கள் 4 அலுமாரிகள் 2 கபட்கள், 2 பயில் ராக்கைகள், மல்டி மீடியா கணிப்புகள் இயந்திரம் ஒன்றும் பென்டிரைவ் (32GB) 19 உம் இருந்தன.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

1999 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்க ரணவிரு சேவை அதிகாரச்சட்டத்தின் 5(ஈ) பிரிவின் படி பணியாளர்களை பணியமர்த்துவதற்கான அதிகாரம் அதிகாரியின் முகாமைத்துவ சபைக்கு வழங்கப்பட்டுள்ள போதும் தலைவியினால் உரிய தகைமையற்ற ஊழியர்கள் 11 பேர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதி இலக்கம் 30 ஐ கொண்ட முகாமைத்துவ சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட எம்.எம்-1-1-2006 சம்பள திட்டத்தின் படிகள் 6 முன்னால் வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதிகாரியின் தலைவி இதுபற்றி விளக்கமளிக்கையில், இந்த நியமனம் தொடர்பாக அனுமதி பெறும் பொருட்டு 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அதிகாரியின் முகாமைத்துவ சபைக்கு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் முகாமைத்துவ சபையினால் மேலும் விசாரணை செய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்ட போதிலும் அக்குழு அறிக்கையின் பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5. நிலையான அபிவிருத்தி

## 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

நிலையான அபிவிருத்தி தொடர்பில் ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ரணவிரு அதிகாரசபையினால் அவர்களின் நோக்கத்திற்குட்பட்ட பணிகள் தொடர்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய முறைகள் தொடர்பில் தெளிவு பெற்றிருந்த போதிலும், அந்த செயற்பாடு வருடாந்த திட்டத்தில் குறிப்பிடப்படாததுடன் வருடாந்த வரவு, செலவு திட்டத்திலும் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி அறிக்கையை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதி இலக்கம் பீஈடீ/12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் படி நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதி அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்கான நிதி அறிக்கையானது 2018 யூன் 28 ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6.1 கொள்முதல் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

### 6.1.1 பெறுகை கொள்முதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரியினால் 2017 சனவரி மாதத்தில் ரூபா 3,776,250 க்கு கொள்வனவு செய்யப்பட்ட மின் பிறப்பிக்கும் இயந்திரம் (ஜெனரேட்டர்) தொடர்பாக விலைக்கேள்விகளை திறத்தலானது அதற்கான நியமிக்கப்பட்ட திகதியான 2016 டிசெம்பர் 01 இல் அல்லாது 2017 சனவரி 04 ஆம் திகதி நடைபெற்றது. மேலும்,

விலைக்கேள்வி திறப்பு தொடர்பான கூற்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாத போதிலும், அந்த நடவடிக்கைகள் தொடர்பான வெளிப்படைத்தன்மை சிக்கல் தன்மையுடைதாக காணப்படுகின்றது. இதனால் செயலாற்றல் பிணைப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளபடாமலே முற்பண தொகையாக ரூபா 2,620,000 வழங்கப்பட்டதுடன், இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்ட இடம் பின்னர் மாற்றம் செய்யப்பட்டமையால் மேலதிக கிரயம் ரூபா 729,750 செலவு செய்யப்பட்டது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வர்ண நிழல் பிரதி இயந்திரத்திற்கான அவசியம் தொடர்பில் எவ்வித வேண்டுகோளும் இல்லாமல் ரூபா 827,770 செலவு செய்து இரண்டு வர்ண நிழற்பிரதி இயந்திர்ங்கள் நடப்பாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன இது தொடர்பில் 6 விலைக்கேள்வி வழங்குர்களினால் விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்ட போதும் அவர்கள் தேவையான தகைமைகளைப் பெற்றிருந்த போதிலும், மதிப்பீட்டுக் குழுவினால் குறைந்த விலை குறிப்பிட்ட மூன்று வழங்குனர்களுக்கும் சரியான தகைமை இல்லை என நிராகரித்து நான்காவது குறைந்த விலை குறிப்பிட்ட வழங்குனர் தெரிவு செய்து செயலாற்றல் பிணைப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் பெறுகை வழங்கப்பட்டது. ஒரு நிழற் பிரதி இயந்திரத்திற்கான கிரயம் மற்றும் பராமரிப்புச் செலவு தொடர்பில் மதிப்பீடு செய்யப்படவில்லை.

## 6.2 வரவு செலவு திட்ட கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் திருத்தத்திற்குட்பட்டது. அதற்கமைய அதிகாரியின் வரவு செலவு பதிவேடொன்று தயாரிக்கப்படுவது மிகவும் உண்மையானதாக இருக்க வேண்டி இருப்பினும் அவ்வாறு தயாரிக்கப்படாது இருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஎடி 12 ஆம் இலக்கமுடைய அரச வியாபார சுற்றறிக்கை 5.2.1 ஆம் பிரிவின் படி வரவு செலவு வருவான செலவுக் கூற்று, வரவு செலவு நிதிக்கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை.

## 6.3 வருடாந்த அறிக்கை பராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2002 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி 21 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாக ரணவிரு சேவை அதிகாரியினால் நிதி வருடம் முடிவுற்று 150 நாட்களுக்குள் நடைமுறையாண்டிற்கான செயல்திறன் அறிக்கை பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருப்பினும், 2015, 2016 ஆண்டுகளுக்குரிய செயல்திறன் அறிக்கையொன்று 2018 யூன் 31 திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதாணிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) பெறுகைகள் | பண்டங்கள் கொள்வனவு தொடர்பாக அரச பெறுகைகள் வழிகாட்டல் கைநூலுக்கு அமைவாக நடைபெறவில்லை. |
| (ஆ) முற்பணங்கள் கட்டுப்பாடு | முற்பண கொடுப்பனவு, தீர்ப்பனவு மற்றும் பயன்பாடு தொடர்பாக முறையாக மேற்பார்வை செய்யப்படவில்லை. |
| (இ) உள்ளகக் கட்டுப்பாடு | அதிகாரியின் உள்ளக கிளைகள் / பிரிவுகளில் செயற்பாடுகள் சரியாக நடைபெற தேவையான முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை நடைமுறைப்படுத்தவில்லை. |